வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 08.02.2025 சனிக்கிழமை | இதழ் : 39 | பக்கங்கள் : 12

# 13ஆவது திருத்தச் சட்டமே இல்லாமல் போகும் நிலை!

## கோடீஸ்வரன் எம்.பி. சபையில் எச்சரிக்கை

கொழும்பு, பெப்ரவரி 08

**13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பல விடயங்களை எடுக்கின்றபோது அந்தச் சட்டமே இல்லாமல் போகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுமென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிரற்ற நிலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கு உயிர் கொடுக்கவேண்டிய கடமை இருக்கின்றது. புதிதாக வந்த அரசாங்கம் இந்த விடயத்தில் கவனத்தைச் செலுத்தும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

13ஆவது திருத்த சட்டத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் ஏற்கனவே இருந்த அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டு விட்டன. அது பெரிய தவறாகக் காணப்படுகின்றது. இதனால் 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக இல்லாமல் போகும் நிலை உருவாகும். அதனால் பாதிக்கப்படப்போவது வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள்.

சதொச நிறுவனங்கள் தற்போது இல்லாமல் போய்விட்டன. அதனால், பலநேக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீள உயிர் கொடுங்கள் - என்றார்.

## நாட்டை விட்டு வெளியேறும் முடிவில் 7,000 மருத்துவர்கள்

கொழும்பு, பெப். 08

இலங்கையில் சுமார் 7,000 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற தீர்மானித்துள்ளனர் என்றும் சுமார் 2,000 வைத்தியர்கள் ஏற்கனவே நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் பணியாற்றி வருகின்றனர் எனவும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச தெரிவித்தார்.

மேலும் 5,000 வைத்தியர்கள் தங்கள் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை பெற்றுள்ளனர் என்றுஅவர் குறிப்பிட்டார்.

11

## கச்சதீவு பெருந் திருவிழாவில் 9ஆயிரம் பக்தர்கள் பங்கேற்பர்

### அதற்கான ஏற்பாடுகள் தீவிரம்

யாழ்ப்பாணம், பெப். 08

கச்சதீவு திருவிழாவில் இவ்வருடம் இலங்கையைச் சேர்ந்த 4,000 யாத்திரிகர்களும் இந்தியாவைச் சேர்ந்த 4,000 யாத்திரிகர்களும் என 8 ஆயிரம் யாத்திரிகர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், மேலதிகமாக உத்தியோகத்தர்கள், ஏனையோர் என ஆயிரம் பேர் உள்ளடங்கலாக 9 ஆயிரம் பேர் இதில் கலந்துகொள்வார்கள் என

11

## அரிசி பதுக்கப்படுவதால் சாதாரண மக்கள் பாதிப்பு

### சிறிநேசன் சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 08

அரிசி தட்டுப்பாட்டால் இன்று சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

11

## மலையக தமிழர்கள் 5 ஆண்டுக்குள் இலங்கைப் பிரஜைகளாக மாறுவர்!

### அரசாங்கம் சபையில் உறுதி

கொழும்பு, பெப். 08

மலையக தமிழர்கள் ஐந்து ஆண்டு காலத்துக்குள் இலங்கையின் முழுமையான பிரஜைகளாக மாறுவர் என பெருந்தோட்ட மற்றும் சமூக தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மலையக மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கென அடிப்படை வசதிகள் இல்லை. அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்தான். அவர்களுக்கு நாம் செய்யும் சேவையை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என நினைக்கிறோம்.

அதிகளவானர்கள் அடையாள அட்டையின்றி உள்ளனர். பிறப்புச்

11

## குறைந்த விலைக்கு அரிசி விநியோகம்!

### விவசாய அமைச்சர்

கொழும்பு, பெப். 08

விவசாயிகளிடமிருந்து நிர்ணய விலையின் கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரசியாக்கி தற்போதைய சந்தை விலையை விட குறைந்த விலையில் நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாயம் மற்றும் கால்நடை துறை பிரதி அமைச்சர்

11

## பட்ஜெட்டில் வடக்குக்கு ஒதுக்கும் நிதி தொடர்பில் ஆளுநர் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 08

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்படவுள்ள நிதிக்கு, வடக்கு மாகாணத்தினால் முன்மொழியப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான மீளாய்வு கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில், விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

ஒவவோர் அமைச்சுக்கள், அதன் கீழான

11

## யாழ். ஆலயங்களில் அதிக ஒலி எழுப்பப்பட்டால் சட்டம் பாயும்!

யாழ்ப்பாணம், பெப். 08

யாழ். மாவட்டத்தில் அதிக சத்தங்களுடன் ஒலிபெருக்கிகளை ஒலிக்க விடும் ஆலயங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

11

## ஐ. எம். எவ். கடன் மறுசீரமைப்பின் 3ஆம் மதிப்பாய்வு வரும் வாரத்தில்!

கொழும்பு, பெப். 08

இலங்கையுடனான நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் இடம்பெற்ற மூன்றாவது மதிப்பாய்வு தொடர்பில் ஆராய்வதற்காகச் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபைக் கூட்டம் எதிர்வரும் வாரங்களில் நடைபெறும் எனச்

11

## மன்னார் துறைமுக முனையத்தை நிர்மாணிக்க விலைமனுக் கோரல்

கொழும்பு, பெப். 08

மன்னார் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கான விலைமனு கோரப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னார் துறைமுகத்தின் முனையம் நிர்மாணிக்கப் படவுள்ளதாக பிரதி அமைச்சர் ருவன் கொடித்துவக்கு குறிப்பிட்டார்.

இதற்கு இணையாக மன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்க

11

## எம். பிக்களின் ஒய்வூதியத்தை இரத்து செய்ய முன்மொழிவு!

### ரவி கருணாநாயக்க முன்வைத்தார்

கொழும்பு, பெப். 08

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒய்வூதியத் திட்டத்தை இரத்துச் செய்வதற்கான முன்மொழிவு ஒன்று பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவினால் பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

தனிநபர் பிரேரணையாக இதனை ரவி கருணாநாயக்க சமர்ப்பித்தார்.

11

## 13 இந்திய மீனவர்கள் விடுதலை; நால்வருக்கு தொடர்ந்து மறியல்

மன்னார், பெப். 08

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களில் 13 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், ஏனைய நான்கு மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி அதிகாலை மன்னார் கடற்பரப்பில் தலைமன்னார் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் அமைப்புக்களை திருப்திப்படுத்துகின்றது அரசு!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 08

**புலம்பெயர் அமைப்புக்களை திருப்திப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சானக மாதுகொட தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் தலைமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மக்களின் எதிர்பார்ப்புக்கள் நாளுக்கு நாள் நிர்மூலமாகிக்கொண்டுள்ளன. மக்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் அவர்கள் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டதாக தெரியவில்லை. மாறாக கடந்த பாராளுமன்ற அமர்வுகள் பூராகவும் 76 வருட காலம் தொடர்பிலேயே பேசிக்கொண்டுள்ளனர்.

அது மாத்திரமல்லாது புலிகளையும், புலம்பெயர் அமைப்பக்களையும் திருப்திப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் தற்போது செயற்பட்டு வருகின்றது. அதற்காக யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவண்ணமுள்ளனர்.

புலிப் பிரிவினைவாதத்தை அல்லது தமிழ் பிரிவினைவாதத்தை விரும்பும் தரப்பினரை திருப்பதிப்படுத்துவதற்காகவே அரசாங்கம் இந்த விடயங்களை மேற்கொள்கின்றது. அதற்காக அரசாங்கம் மகிந்தவின் பாதுகாப்பை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேபோன்று மக்களுக்கு அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு புறம்பாக செயற்பட்டுக் கொண்டுள்ளது-என்றார். (அ)

# அரிசியை அதிக விலை விற்றால் சட்டம் பாயும்!

கொழும்பு, பெப். 08

கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி கிலோ ஒன்றை 230 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக வணிக, உணவு பாதுகப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாராளுன்றத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை அரிசியின் விலை சந்தையில் அதிகரித்துள்ளமை குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிரி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் பதிலளித்த அமைச்சர்-எதிர்வரும் நாட்களில் அரிசி ஒரு கிலோவை 230 ரூபாய்க்கும் குறைவாக சதொசயில் பெற்றுக்கொள்ளலாம்.

சிவப்பு அரிசி போது மான அளவு கையிருப்பில் உள்ளது.

தம்புள்ளை, கொழும்பு கோட்டை, பதுளை, மாத்தறை, காலி மற்றும் இரத்மலானை ஆகிய பகுதிகளில் அதிக விலையில் அரிசி விற்பனை செய்தவர்கள் குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதுடன், அவர்களை கைது செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரிசி பற்றாக்குறையே விலை அதிகரிப்பிற்கான காரணம்.

விவசாயத்துக்குத் தேவையான உரங்களை வழங்கி அரசாங்கம் தொடர்ந்து விவசாயிகளுக்கு உதவியளிக்கிறது-என்றார். (அ)

# சிவப்பு அறிவிப்பு பிறப்பிக்கப்பட்ட 3 சந்தேக நபர்கள் மீள அழைப்பு!

கொழும்பு, பெப். 08

நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாகத் தேடப்பட்டு வந்த மூன்று சந்தேக நபர்கள் நாட்டுக்கு நேற்று அழைத்து வரப்பட்டனர்.

துபாயில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று இந்நாட்டுக்கு அழைத்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை பொலிஸாரின் அறிவிப்பின் அடிப்படையில், இன்டர்போல் அந்த சந்தேக நபர்களுக்கு சிவப்பு அறிவிப்பும் பிறப்பித்திருந்தது.

இதேவேளை மூன்று சந்தேக நபர்களும் நேற்று விமானத்தில் கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பழக்கடைகளை சுற்றிவளைத்த நுகர்வோர் விவகார அதிகாரசபை

கொழும்பு, பெப். 08

புறக்கோட்டையில் உள்ள பழக்கடைகளில் நுகர்வோர் விவகார அதிகார சபையினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பழக்கடைகளில் விற்பனை செய்யப்படும் பழங்களின் தரங்களைக் கண்டறிய இந்த சோதனை நடவடிக்கையை நுகர்வோர் விவகார அதிகாரசபையினர் முன்னெடுத்தனர்.

நுகர்வோர் விவகார அதிகாரசபையினருக்கு தொடர்ந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமையவே இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனை நடவடிக்கையின் போது ஒருசில கடைகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# தென்னாபிரிக்கா, பாக்கிஸ்தானின் தூதுவர்களாக முன்னாள் தளபதிகள்

கொழும்பு, பெப். 08

முன்னைய அரசாங்கங்களைபோல தேசிய மக்கள் சக்தியும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு அரசியல் நியமனங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-இலங்கையின் வெளிநாட்டு சேவை அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது என கடந்தகாலங்களில் விமர்சனங்களை முன்வைத்திருந்த போதிலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அரசியல் நியமனங்களில் ஈடுபடவுள்ளது.

கடந்த வருடம் ஜனாதிபதியாக அனுரகுமார திசநாயக்க பதவியேற்ற பின்னர் அமெரிக்க தூதுவர் மகிந்த சமரசிங்கவை தவிர அரசியல்ரீதியில் நியமிக்கப்பட்ட அனைத்து தூதுவர்களையும் அரசாங்கம் மீள அழைத்திருந்தது.

இது குறித்து ஏற்கனவே அதிருப்தி வெளியிட்டுள்ள இராஜதந்திரிகள் மகிந்த சமரசிங்கவின் நியமனமும் அரசியல் நியமனமே ஏன் அவரை மீள அழைக்கவில்லை என கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனினும் சர்வதேச நாணயநிதியத்துடன் ஈடுபாட்டை பேணுவதற்கு மகிந்தசமரசிங்க அமெரிக்க தூதுவராக தொடர்ந்தும் பணிபுரிவது அவசியம் என அரசாங்கம் தெரிவிக்கின்றது.

எனினும் சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ந்தும் ஈடுபாட்டை பேணுவதற்கு தூதுவரின் பங்களிப்பு அவசியமில்லை என கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை உலகநாடுகளின் தலைநகரங்கள் சிலவற்றிற்கு அரசியல் நியமனங்கள் சிலவற்றை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.ஜப்பானுக்கான இலங்கை தூதுவராக பேராசிரியர் ஜானக குமாரசிங்க நியமிக்கப்படவுள் ளார்.

தென்னாபிரிக்காவுக்கான தூதுவராக முன்னாள் கடற்படை தளபதி உதேனி ராஜபக்ச நியமிக்கப்படவுள்ளார். (அ)

# பலாலி ஓடுபாதையை விரிவாக்குவதற்காக ஒருதலைப்பட்சமாக காணி அபகரிக்காதீர்!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை

கொழும்பு, பெப். 08

பலாலி ஓடுபாதையை விரிவாக்குவதற்காக ஒருதலைப்பட்டசமாக காணிகளை அபகரிக்கக் கூடாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்-ஓடுபாதையை விரிவுபடுத்துவதற்காக பலாலியில் மேலும் நிலத்தை அரசாங்கம் அபகரிக்கப் போவதாக செய்தி வெளியாகி உள்ளது.

தற்போது பலாலி ஓடுபாதை 1,300 மீற்றராகவும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் 3,400 மீற்றராகவும் ரத்மலானை விமான ஓடுபாதை 1700 மீற்றராகவும் உள்ளது.

தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள உள்ள பலாலி விமான நிலையத்துக்கான விமான ஓடுபாதையை மேலும் 2,400 மீற்றர் வரை நீடிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது இரத்மலானை விமான ஓடுபாதையின் அளவை விட அதிகமான தாகும்.

அரசாங்கம் மேலும் காணிகளை அபகரிக்கும் நோக்கில் செயற்படுவதால் பலாலி பிரதேசத்தில் மீள் குடியேற்றுவதற்காக காத்திருக்கும் பலாலி மக்கள் பெரும் கொந்தளிப்பில் உள்ளனர்.

ஜனாதிபதி யாழ்ப்பாணம் சென்று அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் என்று கூறியிருந்தாலும், உயர்பாதுகாப்பு வலயமாக காணப்படும் பலாலி பகுதிக்குள் விமான ஓடுபாதை நீடிப்புக்காக மேலும் காணிகளை அபகரிக்க இந்த அரசாங்கம் சிந்திக்கின்றது.

இந்த விடயங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் கலந்துரையாடப்பட வேண்டும். யாழ்ப்பாண மாவட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி கருத்துக்களைக் கேட்டறிய வேண்டும். எங்களுக்கும் கருத்துகள் உள்ளன.

நீங்கள் உண்மையில் மிகவும் திறமையான சர்வதேச விமான நிலையத்தை உருவாக்கப் போகிறீர்கள் என்றால் உண்மையில் யாழ்ப்பாணம் பொருத்தமற்ற இடமாகும். அது ஒரு மூலையில் உள்ளது. வன்னியில் எங்காவது கட்டலாம். வவுனியாவில் அல்லது அனுராதபுரத்தில் அமைக்கலாம், கிழக்கில் அமைக்கலாம். மத்திய பகுதி யொன்றில் அமைக்க வேண்டும். ஏதோ ஒரு மூலையில் அமைக்கத் தேவையில்லை.

எனவே இவை விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகும். மேலும், பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, அரசாங்கம் ஒருதலைப்பட்சமான நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றேன்-என்றார். (அ)

# ஈ-8 விஸா பிரிவின் கீழ் பணம் வசூலிக்கும் மோசடி

கொழும்பு, பெப். 08

தற்போது செயல்பாட்டில் இல்லாத கொரிய ஈ-8 விஸா பிரிவின் கீழ் வேலைவாய்ப்பு வழங்குவதாக வாக்குறுதி அளித்து தனிநபர்களிடமிருந்து பணம் வசூலிக்கும் மோசடி நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுவருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், ஈ-8 விசா பிரிவின் கீழ் வேலைவாய்ப்பு அல்லது தொடர்புடைய பயிற்சிக்காக எந்தவொரு தனியார் வேலைவாய்ப்பு நிறுவனம், தனிநபர் அல்லது தனிநபர் குழுவுக்கும் இதுவரை எந்த அங்கீகாரமும் வழங்கவில்லை என்பதை பணியகம் அறிந்துள்ளது.

அதன்படி, எந்தவொரு வேலைவாய்ப்பு நிறுவனமோ, தனிநபரோ அல்லது தனிநபர் குழுவோ அத்தகைய செயலில் ஈடுபடுவதற்கு சட்டப்பூர்வ அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை என்று பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
08.02.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# எதைப் பேசுவதென்று தெரியாத நிலையில்...!

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும் - ஆனால், எதை வைத்து எதிர்ப்பது என்று தெரியாத நிலையில் அவ்வப்போது ஏதாவது ஒன்றைப் பேச முற்படுகின்றனர். அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்தும் ஓர் அரசாக இருப்பதாக விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கின்றார். மகிந்த ராஜபக்ஷ காலத்தில் சிங்கள அடிப்படைவாதத்தின் ஊதுகுழல் போன்று தொழில்பட்டு வந்த வீரவன்ஸ, சரத் விஜயசேகர போன்றவர்கள் அண்மைக்காலமாக என்ன பேசுவதென்று தெரியாத நிலையில் இருக்கின்றனர்.

ஆனாலும் அரசியலில் தாங்களும் இருக்கின்றோம் என்பதைக் காண்பிக்க வேண்டும் என்னும் முனைப்பில் தொடர்பற்ற வகையில் அவ்வப்போது பேசுகின்றனர். இவ்வாறு பேசுபவர்கள் தமிழ்ச் சூழலிலும் இல்லாமல் இல்லை. தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து வழக்கமான பாணி அரசியலை முன்னெடுப்பதில் சிலர் நெருக்கடியை சந்தித்திருக்கின்றனர். பெருமளவுக்கு அவர்கள் அரசியலில் தாக்குப்பிடிக்க முடியாதளவுக்கு ஓரங்கட்டப்பட்டிருக்கின்றனர்.

விமல் வீரவன்ஸ, சரத் விஜயசேகர போன்றவர்கள் எல்லாக் காலத்திலும் தமிழர் விரோத அரசியலை முன்வைத்து சீவிக்கலாம் என்று எண்ணுபவர்கள். அவ்வாறானவர்கள் கொழும்பில் செல்வாக்கு மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணும் தமிழ் அரசியல் குழுக்களும் இல்லாமல் இல்லை. இதன்மூலம், எதிரிக்கு எதிரி நண்பன் என்னும் வகையில் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கலாம் என்று கருதுபவர்களும் இருக்கின்றனர்.

ஆனால், அடிப்படையில் இவ்வாறான எதிர்ப்பு அரசியல் போக்கால் எதனையும் இதுவரையில் இரண்டு தரப்புக்களுமே சாதிக்கவில்லை. மாறாக நாட்டை அதலபாதாளத்துக்கு தள்ளியதுதான் மிச்சம். தமிழர் பக்கத்தில் எதிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் எதிர்க்கப்படத்தான் வேண்டும். ஆனால், எதிர்க்க வேண்டிய - அழுத்தமாக வலியுறுத்த வேண்டிய விடயங்களை விட்டுவிட்டு வெறுமனே தேர்தல் அரசியலுக்குப் பயன்படக் கூடிய விடயங்களைக் கையில் எடுப்பதுதான் தவறானது.

உண்மையில், தமிழர் பக்கத்தில் எதிர்க்கப்பட வேண்டிய முக்கிய விடயம் மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்தும் அரசாங்கம் பிற்போடுவதாகும் - இது வன்மையாக எதிர்க்கப்பட வேண்டும். அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்தப்படாமல் இருப்பது எதிர்க்கப்பட வேண்டும். ஆனால், தமிழ் மக்களுக்காக அரசியலை முன்னெடுப்பதாகக் கூறிக்கொள்ளும் அரசியல் கட்சிகள் எவையுமே இது பற்றிப் பேசவில்லை - அதற்காக வீதிக்கு இறங்கவில்லை.

உண்மையில், அரசாங்கங்களின் அணுகுமுறை ஜனநாயக விரோதமானது - ஆனால், இது பற்றி பேசுவதற்கு - பிரத்தியேக எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தமிழ் கட்சிகள் தயாராக இல்லை.

தென்னிலங்கையில் சிங்கள மக்களின் நலன்களை முன்வைத்து அரசாங்கத்தை எவ்வாறு எதிர்கொள்வது என்று தெரியாமல் அடிப்படைவாதிகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றார்கள் என்றால், மறுபுறமாக, தமிழ்ச் சூழலில், எந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தை எதிர்கொள்ள வேண்டுமோ, அந்த விடயங்களை விட்டுவிட்டு, ஏற்கனவே கட்டப்பட்ட விகாரைகள் தொடர்பில் பேசிக்கொண்டிருக்கின்றனர். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மற்றவர்களை விடவும் தாங்கள் வித்தியாசமானவர்கள் என்பதைக் காண்பிக்க முற்படுகின்றனர். இந்த விடயத்தைத்தான் தமிழ் கட்சிகள் கச்சிதமாக பற்றிக் கொள்ள வேண்டும். முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அதன் முழுமையான இயங்கு நிலைக்கு வழிவகுக்க வேண்டும் என்னும் குரலை தமிழ் கட்சிகள் முன்வைக்க வேண்டும்.

# யாழ்ப்பாணத்தில் அதிக ஒலி எழுப்பி இடையூறு செய்தால் சட்ட நடவடிக்கை

## ஆலயங்களுக்கு அரச அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.08

யாழ்ப்பாணத்தில் அதிக ஒலியை எழுப்பி இடையூறு செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் பாதுகாப்பு குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அந்த வகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் திண்மக் கழிவு அகற்றல், வளி மாசடைதல், பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் ஒலிபெருக்கிகளை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்றைய தினம் மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆலயங்கள் மற்றும் வேறு நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகளால் அசௌகரியங்கள் ஏற்படுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆலயங்களில் உங்களது சமய நிகழ்வுகளின்போது ஒலிபெருக்கிகளை பயன்படுத்தும்போது அயலில் உள்ளவர்கள், மாணவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் ஒலிபெருக்கிகளை பயன்படுத்துங்கள்.

ஆலயங்கள் அமைந்துள்ள பகுதியில் இருந்து மிகவும் தொலைவில் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு அதிக ஒலி எழுப்பப்படுகிறது. ஆகவே, உங்களது ஆலயங்களில் எழுப்பப்படும் ஒலிபெருக்கி ஒலிகள் மூலம் ஏனையோருக்கு இடையூறு ஏற்படா வண்ணம் செயல்படுமாறு ஆலய நிர்வாகத்தினர் அல்லது தர்மகர்த்தாக்களை கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இரவு வேளைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்த ஒலிபெருக்கி மூலம் இடையூறு ஏற்படுவதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். ஆகவே, இதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

ஆகவே, இதனைக் கட்டுப்படுத்தக்கூடிய வல்லமை பொலிஸாருக்கு உள்ளது. இது குறித்து எழுத்து மூலம் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளோம்.

இவ்வாறு அசௌகரியங்கள் ஏற்படும் பட்சத்தில் பொது மக்கள் உங்களுடைய முறைப்பாடுகளை பிரதேச செயலகங்களுக்கு தெரிவிப்பதன் மூலம், பிரதேச செயலர்கள் அதனை உடனடியாக பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவந்து அந்த ஒலியின் அளவை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்"- என்றார். (எ- 05)



யாழ்ப்பாணம், அராலி மேற்கு நீளத்திக்காடு அருள் மிகு சிறீ பேச்சி யம்மாள் ஆல யத்தின் வருடாந்த குளிர்த்தி உற்சவம் நேற்று முன்தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

# ஈச்சிலவக்கை கிராம உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை

மன்னார், பெப்.08

மாந்தை மேற்கு- ஈச்சிலவக்கை கிராம உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித் துள்ளார்.


மன்னார் மாவட்டத்தின் உயிலங்குளம், அடம்பன், ஈச்சிலவக்கை ஆகிய கிராமங்களுக்கு நேற்று முன்தினம் சென்று அங்குள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிலங்குளம் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவை பார்வையிட்டோம். இந்த மருத்து வமனையானது பல குறைபா டுகளுடன் காணப்படுகின்றது. கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் மூலம் இந்த மருத்துவ மனையை சுத்தப்படுத்தவுள் ளோம். மற்றும் மலசல கூட வசதிகள் செய்து கொடுக்கப் பட வேண்டியுள்ளது. மருந்துகளை வைத்து பராமரிப்பதற்கான குளிரூட்டப்பட்ட வசதிகள் கொண்ட களஞ்சியசாலை என்பவற்றையும் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மேலும், மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள ஈச்சலவக்கை கிராமம் மிகவும் பின்தங்கிய கிராம மாகவுள் ளது.

இந்தக் கிராமத் தில் பல உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப் பட வேண் டிய தேவை உள் ளது. - என் றார். (எ-10)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி - 08 சனிக்கிழமை
குரோதி வருடம் - தை 26
நல்ல நேரம்: 7.31 - 9.00
ராகு காலம்: 9.00 - 10.30
திதி : ஏகாதசி




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். திடீர் இலாபம் உண்டு.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்லக்கூடிய சில கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப்பிருக்கிறது.

**மிதுனம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கடகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை

**சிம்மம்**
உணர்ச்சிவசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப்பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர், நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**கன்னி**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகு முறையால் தீர்வு காண்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். உறவினர்கள், நண்பர்களிடம் முன்கோபத்தால் பகை உண்டாகும்.

**விருட்சிகம்**
மூத்த சகோதரர் வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். வேற்று மதத்தவர் நண்பர்களாவார்கள்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**மீனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். உதவி செய்வீர்கள்.

# யாழில் சுண்ணக்கல் அகழ்வுக்கு குழு அமைத்து சிபார்சு செய்யவும்

## மாவட்ட அரசாங்க அதிபர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப்.08

யாழ்ப்பாணத்தில் சுண்ணக்கல் அகழ்வு தொடர்பில் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், பொலிஸார் அடங்கியவகையில் குழு அமைத்து சிபார்சு செய்யுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சுற்றாடல் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைமையுரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், கிளீன் சிறீலங்கா செயல்திட்டத்தில் சுற்றாடல் தூய்மையும் உள்ளடங்குவதால் கழிவகற்றல் பொறிமுறை சிறப்பாக இருத்தல் வேண்டும். அதற்கு முதற் கட்டமாக பாடசாலை மாணவர்களிடமிருந்து விழிப்புணர்வு செயல்பாடுகளை ஆரம்பிப்பதற்கு உள்ளூராட்சி அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரதேச ரீதியாக பொது மக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி கழிவகற்றல் பொறிமுறையை உருவாக்கலாம்.

மேலும், சண்டிலிப்பாய் மற்றும் கோப்பாய் பிரதேச செயலகங்களில் முன்னோடி செயல்திட்டமாக பொதுமக்கள் மற்றும் தொடர்புடைய திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடி பொறிமுறையை உருவாக்கிச் செயல்படுத்துமாறும் அறிவுறுத்தினார். சுண்ணக்கல் அகழ்வு தொடர்பில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்துக்குரிய பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியக பொறியியலாளர், பிரதேச சபைச் செயலாளர் மற்றும் பொலிஸார் ஆகியோர் அடங்கியவகையில் குழு அமைத்து சிபார்சு செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும், இந்தக் கூட்டத்தில் நகர்ப் புறங்களில் காணப்படும் கழிவகற்றல் பிரச்னைகள், திண்மக் கழிவு முகாமைத்துவம், வளி மாசு மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

(எ-05)

### மாற்றுத்திறனாளிகளுக்கு

# தொழில் வாய்ப்பு வழங்கியோருக்கு யாழில் விருது வழங்கி கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.08

மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில் வாய்ப்பு ஆதரவை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விருது வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதில், தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களின் நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றி இலக்கினை அடைய செயல்பட்ட சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மனிதவலு வேலைவாய்ப்பு உத்தியோகத்தர்கள், தொழில் வாய்ப்பை வழங்கிய நிறுவனங்கள் மற்றும் தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொண்ட மாற்றுத்திறனாளிகள் எனப் பலர் கௌரவிக்கப்பட்டனர்.

2023 ஆம் ஆண்டு யாழ். மாவட்டம் 14 நபர்களை தொழிலில் ஈடுபடுத்தி தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

(எ-05)

# திடீரென தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்

வவுனியா, பெப்.08

வவுனியாவில் ஏ - 9 வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றியது.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.



வவுனியா நகரில் இருந்து சென்ற மோட்டார் சைக்கிள், வவுனியா மகா வித்தியாலயத்தை அண்மித்து நிறுத்தி விட்டு, மீண்டும் புறப்பட தயாரான போது திடீரென தீப்பற்றி எரிந்தது. தீயைக் கட்டுப்படுத்த முயன்ற போதும் மோட்டார் சைக்கிள் எரிந்து நாசமானது.

(எ-10)

# "இரு இனத் தேசியங்களில் விடுதலைத் தேசியம்"

## நூல் நாளை வெளியீடு

வவுனியா, பெப்.08

கலாநிதி ந. இரவீந்திரனின் "இரு இனத் தேசியங்களில் விடுதலைத் தேசியம்" நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு யாழ்ப்பாணம், திருவடிநிழல் அம்மன் வீதியில் உள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளர் சோ. தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை ஜீவநதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் பதிப்பாளருமான க. பரணீதரனும், நூல் ஆய்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கந்தையா சிறீகணேசனும், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. திருவரங்கனும் ஏற்புரையை நூலாசிரியர் கலாநிதி ந. இரவீந்திரனும் மேற்கொள்ளவுள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ரஷ்ய இராணுவத்தில் சேர்ந்த இலங்கையர்களில் 59 பேர் பலி!

## சபையில் கூறினார் விஜித ஹேரத்

கொழும்பு, பெப். 08

**ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர்களில் 59 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.**

2025 ஜனவரி 20ஆம் திகதி வரையான தகவல்களை அடிப்படையாகக்கொண்டே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

ரஷ்ய இராணுவத்தில் 554 இலங்கையர்கள் இணைந்துள்ளதாகவும், அவர்களில் யாரும் வலுக்கட்டாயமாக ஆட் சேர்ப்பு செய்யப்பட வில்லை என்றும் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர்களை விடுவித்து நாட்டுக்கு மீள கொண்டு வருவதற்குரிய முயற்சி இடம்பெற்றுவருகின்றது எனவும் வெளிவிவகார அமைச்சர் கூறினார். (அ)



## லசந்தவின் படுகொலைச் சந்தேக நபர்களின் விடுதலைக்கு எந்த அடிப்படையில் பரிந்துரை?

கொழும்பு, பெப். 08

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைச் சந்தேக நபர்களை விடுதலை செய்யலாம் என சட்டமா அதிபர் எந்த அடிப்படையில் பரிந்துரை செய்துள்ளார் என லசந்த விக்கிரமதுங்கவின் சகோதரர் லால் விக்கிரமதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த வழக்கில் அடிக்கடி தீர்மானங்களை மாற்றக்கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னர் சட்டமா அதிபர் திணைக்களம் சந்தேகநபர்களை பிணையில் விடுதலை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் பின்னர் அவர்களே பிணையில் விடுதலை செய்தனர் என தெரிவித்துள்ள லால் விக்கிரமசிங்க, தற்போது அவர்களை விடுதலை செய்துள்ளனர்,எப்படி இவ்வாறு தீர்மானங்களை மாற்ற முடியும்?என கேள்வி எழுப்பினார்.

சட்டமா அதிபர் திணைக்களம் என்பது தனிநபரல்ல,அது ஒரு அரச அமைப்பு என அவர் தெரிவித்தார்.

அரசியல் நோக்கம் கொண்ட குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவதும் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட ஆணை என்பதால் சட்டமா அதிபரின் தீர்மானம் குறித்த தனது முடிவை அரசாங்கம் அறிவிக்கவேண்டும் என லால் விக்கிரமதுங்க வேண்டுகோள் விடுத்தார். (அ)

## ஒன்பது வருடங்களில் 3477 யானைகள் இறப்பு

கொழும்பு, பெப். 08

கடந்த 9 வருடங்களில் 3,477 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட தகவலின்படி தெரியவந்துள்ளது.

சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி பாராளுமன்றத்தில் வெளியிட்ட தகவலின் படி, 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் 1,466 காட்டு யானைகளும், 2020 முதல் 2024 வரையான காலக்கட்டத்தில் 2,011 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்கிடையில், காட்டு யானைகளின் தாக்குதலால் கடந்த 9 வருடங்களில் 1,190 பேர் உயிரிழந்துள்ளதாகவும், இதில் 2015 - 2019 காலப்பகுதியில் 456 பேரும், 2020 - 2024 காலக்கட்டத்தில் 734 பேரும் உயிரிழந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இக் கணக்கீட்டு விவரங்கள் இலங்கையில் மனித யானை மோதலால் ஏற்படும் தாக்கங்களை உணர்த்துவதாகவும், இதனைக் குறைப்பதற்கான தீர்வுகளை அரசு விரைவில் முன்வைக்கவுள்ளதாகவும் சுற்றாடல் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 11,000 ரூபா இலஞ்சமாக வாங்கிய தபால ஊழியருக்கு 28 வருட சிறை!

கொழும்பு, பெப். 08

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாதுகாப்பு கமராக்களின் ஒரு தொகுதியை வரி செலுத்தாமல் விடுவிப்பதற்காக ரூ.11,000 இலஞ்சம் பெற்றதற்காக கொழும்பு மத்திய தபால் நிலையத்தில் பணிபுரியும் அலுவலக உதவியாளருக்கு நேற்று முன்தினம் 28 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனைக்கு கூடுதலாக, குற்றம் சாட்டப்பட்டவருக்கு ரூ.31,000 அபராதம் விதிக்க கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. நீண்ட விசாரணைக்குப் பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் அரசு தரப்பு நிரூபித்துள்ளதாக கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி மகேஷ் வீரமன் குறிப்பிட்டார்.

குற்றப்பத்திரிகையில் நான்கு குற்றச்சாட்டுகளுக்கு குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டு 28 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, கொழும்பு உயர் நீதிமன்றத்தால் தண்டனையை ஏககாலத்தில் அனுபவிக்க உத்தரவிடப்பட்டது.அதன்படி, மொத்த சிறைத் தண்டனை காலம் ஏழு ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தின் சர்வதேச எக்ஸ்பிரஸ் பிரிவுக்கு கிடைத்த 30 சிசிடிவி கமரா பெட்டிகளை விடுவிப்பதற்காக, செப்ரெம்பர் 19, 2016 அன்று, இறக்குமதியாளர் ஒருவரிடமிருந்து குற்றம் சாட்டப்பட்டவர் இலஞ்சம் பெற்றுள்ளார். இலஞ்சம் பெற்றபோது குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டார்.

விசாரணையைத் தொடர்ந்து, இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு இலஞ்சச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தது. (அ)

## உற்பத்திச் செயற்பாடு பாதிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் விசனம்!

கொழும்பு, பெப். 08

வாகன இறக்குமதித் தடையை தளர்த்தியமை மற்றும் வரி அதிகரித்தமைக்கு மத்தியில் தங்களது உற்பத்திச் செயற்பாடுகளுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக உள்நாட்டு மோட்டார் வாகன உதிரிப்பாக உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நிதியமைச்சின் சில அதிகாரிகள் உள்நாட்டு கைத்தொழிலாளர்களை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அந்த சங்கத்தின் உறுப்பினர் சமிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளுக்கு தேவைப்படும் இயந்திரம், மின்குமிழ்கள், மீற்றர்மானி உள்ளிட்ட ஏனைய உதிரிப்பாகங்கள் அனைத்தும் நாட்டில் தயாரிக்கப்படுகின்றன.

இந்தநிலையில், தங்களது உற்பத்திகளுக்கு சிறந்த கேள்வி நிலவுகிறது.

அதேநேரம் தற்போது உதிரிப்பாகங்களை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறான தருணத்தில் வாகன இறக்குமதிக் கட்டுபாட்டை தளர்த்தியமை மற்றும் வரியை அதிகரித்தமை காரணமாக பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக உள்நாட்டு மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக உற்பத்தியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் சமிந்த ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (அ)

## 2024ஆம் ஆண்டு மின்சார சட்டத்தை இரத்துச் செய்து மின் பாவனையாளர் உரிமையை உறுதிப்படுத்துங்கள்!

கொழும்பு, பெப். 08

2024ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க மின்சார சட்டத்தை உடனடியாக இரத்து செய்து, மின் பாவனையாளர்களின் உரிமையையும் மின்சாரத் துறையின் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துமாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்துக்கு வலியுறுத்துகிறார்.

நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ள சஜித் பிரேமதாஸ, அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-


2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டத்தின் கீழ் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழு நிறுவப்பட்டது. இது நாட்டின் மின்சார துறை, பெற்றோலிய துறை மற்றும் நீர் சேவை துறையை ஒழுங்குபடுத்துவதற்காக ஆகும்.

பின்னர் 2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டம் அமுலுக்கு வந்த பின்னர், மின்சாரத் துறையை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரங்கள் இந்த ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டன.

மின்சாரத் துறையின் பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் அன்றிலிருந்து ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டன.

எவ்வாறாயினும், 2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டம் மற்றும் 2002ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் செயல்படும் பொறிமுறையின் கீழ், கொள்கை வகுத்தல் பணி அமைச்சுக்கும், ஒழுங்குபடுத்தல் பணி இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவுக்கும், உரிமம் பெற்றவர்களின் பொறுப்புகள் இலங்கை மின்சார சபை உள்ளிட்ட உரிமம் பெற்றவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.-என்றார். (அ)

## சபாநாயகரைச் சந்தித்து பேசினார் துவிஸ் தூதுவர்



கொழும்பு, பெப். 08

இலங்கைக்கான சுவிற்சர்லாந்துத் தூதுவர் திருமதி சிரி வோல்ட் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்தார்.

சுவிற்சர்லாந்து அரசாங்கம் பல்வேறு துறைகளில் இலங்கைக்கு வழங்கும் ஆதரவுகளுக்கு சபாநாயகர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி, ஊழல் ஒழிப்பு முயற்சிகள், நல்லிணக்கம் மற்றும் பாராளுமன்ற ஒத்துழைப்புக்களை அதிகரித்தல் உள்ளிட்ட பிரதான துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய சுவிட்சர்லாந்துத் தூதுவர், எதிர் காலத்திலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான சுவிட்சர்லாந்தின் உறுதிப் பாட்டை மீண்டும் வலியுறுத் தினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் தரப்பினருக்கு மொட்டு சவால்மிக்கதாக இருக்காது!

## கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார



கொழும்பு, பெப். 08

**பொதுஜன பெரமுன கட்சி தமது அணிக்கு சவால் கிடையாது எனவும், கூட்டணி அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமே தற்போது பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அனைவருக்கும் அரசியல் செய்யும் உரிமை இருக்கின்றது. அந்தவகையில் மொட்டு கட்சி செயல்படுகின்றது.

அவர்களின் நடவடிக்கை எமக்கு சவால் கிடையாது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணையையே கட்சி ஆதரவாளர்கள் விரும்புகின்றனர்.

சிலர் எதிர்த் தபோதிலும், பெரும்பாலான வர்கள் ஆதரவு நிலைப்பாட் டிலேயே உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவியில் எவ்வித மாற்றமும் வராது.

சஜித் பிரே மதாஸவே தலைவர். அவருக்கே மக்கள் ஆதரவு உள்ளது.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள பிரதி ஆணையாளர் வசமாக சிக்கினார்!

கொழும்பு, பெப். 08

சட்டவிரோதமாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகனத்தின் உரிமம் மாற்றத்துக்கு அனுமதியளித்த குற்றச்சாட்டின் கீழ், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஒருவர் நேற்று முன் தினம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பிரதி ஆணையாளர் ரம்புக்கனை பகுதியைச் சேர்ந்தவர் எனவும், அவர் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அம்பாந்தோட்டை அலுவலகத்துக்கு நியமிக்கப்பட்டு தற்போது பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை சுங்கத்தின் அனுமதியின்றி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் மீது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நடத்தி வந்த தொடர்ச்சியான விசாரணைகளுக்கு அமைவாக, டொயோட்டா லாண்ட் குரூசர் வகையான வாகனம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின்போது இந்த சட்டவிரோத பதிவு தொடர்பான உண்மைகள் வெளிப்பட்டுள்ளன.

அதன்படி, சந்தேக நபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, 25,000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 500,000 ரூபா மதிப்புள்ள ஐந்து சரீரப் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டார். (அ)

# தீர்வு கிடைக்காவிட்டால் தொழிற்சங்க போராட்டம்

## நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் கூட்டமைப்பு ஒன்றியம்

கொழும்பு, பெப். 08

தங்களது கோரிக்கைகளுக்கான தீர்வு கிடைக்காவிடின் எதிர்வரும் 12 ஆம் திகதியின் பின் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும் என நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் கூட்டமைப்பு ஒன்றியம் எச்சரித்துள்ளது.

நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் கூட்டமைப்பு ஒன்றியத்தின் செயலாளர் சானக தர்மவிக்ரம இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மேல்மாகாண நிறைவுகாண் மருத்துவ சேவைக்கு உட்பட்ட சுகாதார பதவிகளை வகிக்கும் அதிகாரிகளின் இடமாற்ற பிரச்னைக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரச்னைக்கான உடனடி தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக மேல்மாகாண ஆளுநருடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்வரும் 12 ஆம் திகதியின் பின் தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படும் என நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் கூட்டமைப்பு ஒன்றியத்தின் செயலாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார். (அ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 08

எத்திமலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொலொன் ஆர பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எத்திமலை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

24 வயதுடைய கொனகமுவ, திஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக தெரிவித்த எத்திமலை பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சாந்த அபேசேகர பயன்படுத்திய ஜீப் வண்டியின் பாகங்கள் மீட்பு!

கொழும்பு, பெப். 08

புத்தளம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகர பயன்படுத்தியதாக கூறப்படும் சட்டவிரோதமாக ஒன்று சேர்க்கப்பட்ட ஜீப் வண்டியின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சட்டவிரோத சொத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பிரிவு இதனைப் பொறுப்பேற்றுள் ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகரவுக்கு சொந்தமான காணி மற்றும் அவரது வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்தபோது இந்த வாகன பாகங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்த வாகன பாங்கள் கடுமையாக சேதமடைந்திருந்தாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# தோட்ட மக்கள் பற்றிப் பேச ஜீவனுக்கு அருகதை இல்லை

கொழும்பு, பெப். 08

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக பேசுவதற்கு ஜீவன் தொண்டமானுக்கு எந்த அருகதையும் கிடையாது என கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜீவன் தொண்டமானை தோட்டத்தொழிலாளர்கள் நிராகரித்து கைகழுவி விட்டதாகவும் அமைச்சர் சபையில் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற அமர்வில், புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்,நாட்டில் சில காலமாக தேவையில்லாத பீதியை சிலர் கட்டவிழ்த்து வருகின்றனர். குடிநீருக்கும் ஆபத்து வந்துவிட்டதாக பீதியைக் கிளப்புகின்றனர்.

இவ்வாறான பீதிகளை உருவாக்குவதில் கடந்த 76 வருடங்களாக நாட்டின் சொத்துக்களை சூறையாடியவர்கள், எமது பொருளாதாரத்தை பூண்டோடு அழித்தவர்கள், அரச சொத்துக்களை தங்களது சொத்துக்கள் என நினைத்து தங்களது பாட்டன், பூட்டன், மாமன், மச்சான் என அனைவரும் பகிர்ந்துக்கொண்டு அதன்மூலம் கோடீஸ்ரர்களாக, குபேரர்களாக மாறிய நபர்களும் காணப்படுகின்றனர் என தெரிவித்தார்.

இதன்போது, ஒழுங்குப்பிரச்னை எழுப்பிய இ.தொ.காவின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான்,சானக எம்.பி. ஆதாரபூர்வமாக ஒரு அறிக்கையின்படி குரோமியம் 10 எம்.பி. யில் இருக்கவேண்டியது 14 எம்.பி யில் உள்ளது என நிரூபித்துள்ளார். அதனை அமைச்சர் வசந்த சமரசிங்க ஆராய்ந்து பதிலளிப்பதாகவும் கூறியுள்ளார். அவ்வாறிருக்கையில், நீங்கள் பாட்டன், பூட்டன் என பேசிக்கொண் டிருக்கின்றீர்களே? என அமைச்சரைப் பார்த்து கேள்வியெழுப்பினார்.

இதனையடுத்து, தனது தனது உரையைத் தொடர்ந்த அமைச்சர் சந்திரசேகர்,தோட்ட மக்களைப் பற்றி பேசுவதற்கு இனிமேல் உங்களுக்கு எந்த அருகதையும் இல்லை. நான் உங்களுடன் வாக்குவாதப்பட வரவில்லை. குடிதண்ணீர் தொடர்பாக பீதியை கிளப்ப சிலர் முயற்சிக்கின்றனர். அதில் உண்மையிருந்தால் அதனை நாம் வெளிப்படுத்துவோம் என்றுதான் நான் கூறினேன்.

எனவே, இதில் நீங்கள் தடுமாறவேண்டாம். தோட்டத் தொழிலாளர்களின் பிரச்னைகளையும் நாம் ஆராய்வோம். தோட்டத்தொழிலாளர்கள் இனிமேல் உங்களை நம்பமாட்டார்கள். அவர்களின் நலனைக் கவனிக்க பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன உள்ளார். அவர் தனது பணியை நன்றாகச் செய்கின்றார். எனவே தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக நீங்கள் வீணே தடுமாற்றம் அடைய வேண்டாம்-என்றார். (அ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இராணு லான்ஸ் கோப்ரல் பலி!

கொழும்பு, பெப். 08

இபலோகம ரணஜயபுர பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், 25 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்தாரென இபலோகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, அதிக வேகத்தால், வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் இபலோகம ரணஜயபுர பகுதியைச் சேர்ந்த ஹேரத் முதியன்சேலகே சானுக தேசான் ஹேரத் என்ற 25 வயதுடையவர் என்பதும், இவர் இராணுவத்தில் லான்ஸ் கோப்ரலாக கடமையாற்றி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விபத்தில் தீவிரமாக காயமடைந்த இவர் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும், அங்கு உயிரிழந்துள்ளதாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக இபலோகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஏழு வருடங்களுக்கு பின்னர் அதிக சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, பெப். 08

கடந்த ஜனவரி மாதத்தில் 252,761 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

2018ஆம் ஆண்டுக்கு பின்னர் மாதமொன்றில் இலங்கைக்கு வருகை தந்த அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இதுவாகும் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் புத்திக ஹேவாவசம் தெரிவித்தார்.

2018 ஜனவரி மாதத்தில் 238,924 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இந்த வருடத்தில் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளதுடன் அதன் எண்ணிக்கை 43,375 ஆகும்.

அதனைத் தொடர்ந்து ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளிலிருந்தும் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. மனித உரிமை சபையிலிருந்து அமெ. வெளியேறுவது இலங்கைக்கு சாதகமானது!

## சட்ட நிபுணர் பிரதிபா மஹாநாமஹேவா

கொழும்பு, பெப். 08

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலக அமெரிக்கா எடுத்த தீர்மானம் இலங்கைக்கு சாதகமாக அமையும் என சட்ட நிபுணர் கலாநிதி பிரதிபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.**



எதிர்வரும் பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 58 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்துவதற்கு இந்த மாற்றமானது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை மீது போர்க்குற்றம் சுமத்தப்படுவதிலும், மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் கூடிய கலப்பு நீதிமன்றங்கள் போன்ற பொறிமுறைகளுக்காக வாதிடுவதிலும் அமெரிக்கா தொடர்ந்து முன்னணி பாத்திரத்தை வகித்து வருவதாக கலாநிதி மஹாநாமஹேவா சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா வெளியேறுவது புவிசார் அரசியல் நிலப்பரப்பை இலங்கைக்கு சாதகமாக மாற்றும் என அவர் குறிப்பிட்டார்.

இந்த வளர்ச்சியின் மூலம், எங்களின் சொந்த மனித உரிமைகள் திட்டத்தை முன்வைக்க எங்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பு கிடைத்துள்ளது.

உள்நாட்டில் உருவாக்கப்பட்ட கட்டமைப்பானது, எங்கள் கதை மற்றும் எதிர்கால கொள்கைகளுக்கு பொறுப்பேற்க அனுமதிக்கும்.

இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற முக்கிய நாடுகளின் ஆதரவைப் பெற்றால், இலங்கைக்கு எதிரான முந்தைய தீர்மானத்தை நாம் திறம்பட எதிர்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். (அ)

# கத்திக் குத்துக்கு இலக்காகி பஸ் சாரதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 08

பதுளை நகரத்தில் சேனாநாயக்கபிட்டிய பிரதேசத்தில் கத்திக்குத்துக்கு இலக்காகி பஸ் சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பெலிஹுலோயா, பம்பஹின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடையவர் ஆவார்.

சம்பவத்தன்று, பஸ் சாரதி சேனாநாயக்கபிட்டிய பிரதேசத்தில் பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த போது கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார்.

படுகாயமடைந்த பஸ் சாரதி, வீதியில் வீழ்ந்து கிடந்துள்ள நிலையில், பிரதேசவாசிகளின் உதவியுடன் அம்புலன்ஸ் மூலம் பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வது தொடர்பில் பதுளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சமந்த வித்யாரத்னவை விவாதத்துக்கு அழைக்கும் சாமர சம்பத் தஸநாயக்க!

கொழும்பு, பெப். 08

பாராளுமன்றத்தில் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க, அமைச்சர் சமந்த வித்யாரத்னவை பொது விவாதத்துக்கு வருமாறு சவால் விடுத்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் இருவரும் ஒருவருக்கொருவர் எதிராகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்.

சாமர சம்பத் தஸநாயக்க சம்பந்தப்பட்ட மோசடிகள் குறித்த கோப்புகள் தங்களிடம் உள்ளதாகவும், அவற்றை விசாரிப்பதாகவும் அமைச்சர் வித்யாரத்ன கூறினார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் வாதிட்ட சாமர சம்பத் தஸநாயக்க, சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது தாங்களும், அரசாங்க அமைச்சர்களும் பொது நிதியை வீணடித்து கஜூக்களை எவ்வாறு சாப்பிட்டனர் என்பதுதான் இப்போது பேசுபொருளாக இருப்பதா கவும், தன் மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம் எனவும், அதனால் தனக்குப் பயமில்லை எனவும் கூறினார். (அ)

# சி.ஐ.டியாக நடித்துப் பண மோசடியில் ஈடுபட்ட பெண்ணுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, பெப். 08

குற்றப் புலனாய்வுத் துறையின் கணினிப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகராக நடித்துப் பண மோசடி செய்த சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரைக் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது, பெப்ரவரி 13 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறையில் இணைக்கப்பட்ட கணினி பிரிவைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகராக ஆள்மாறாட்டம் செய்து பல்வேறு நபர்களை மிரட்டிப் பண மோசடி செய்ததாகப் முறைப்பாடுகள் வந்ததை அடுத்து, குற்றப் புலனாய்வுத் துறையினர் நேற்று முன்தினம் குறித்த சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

அதன்படி, விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், சந்தேக நபரைக் காவலில் வைக்குமாறு பொலிஸார் நீதிமன்றத்தில் கோரிகை விடுத்தனர்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொண்டு, சந்தேக நபரைப் பெப்ரவரி 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 08

செவனகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெலும்வெள பிரதேசத்தில் நேற்று மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமாக வீட்டுக்கு பெறப்பட்டிருந்த மின்சாரம் தாக்கியதில் குறித்த நபர் உயிரிழந்ததாகவும், உயிரிழந்தவர் நெலும்வெள, சமகிபுர பிரதேசத்தை சேர்ந்த 31 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று சுகயீனமுற்றிருந்த தனது தாய்க்கு உணவளிப்பதற்காக அருகில் உள்ள வீட்டுக்குச் சென்றிருந்த வேளையில், நாய்களிடமிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக அவரது தந்தையினால் வீட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கியதில் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை செவனகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அரசின் உத்தரவாத விலையை விட அதிக விலைக்கு நெல் கொள்முதல்!

## விவசாயிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 08

பொலனறுவை பகுதியில் உள்ள பாரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் அரசாங்கம் நிர்ணயித்த உத்தரவாத விலையை விட அதிக விலைக்கு நெல்லை கொள்முதல் செய்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, உத்தரவாத விலையை விட 5 ரூபாய் முதல் 10 ரூபாயினை அதிகரித்து விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபையானது, ஒரு கிலோ கிராம் நாடு நெல்லை 120 ரூபாவுக்கும், சம்பா நெல் ஒரு கிலோ கிராமை 125 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் கீரி சம்பா நெல்லை 132 ரூபாவுக்கும் கொள்முதல் செய்யும் என விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்திருந்தார்.

அதற்கமைய, விவசாயிகளின் நெல்லை கொள்வனவு செய்வதற்காக நேற்று முன்தினம் முதல் களஞ்சியசாலைகள் தயாராகவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும், குறித்த சபைக்குச் சொந்தமான சில நெல் களஞ்சியசாலைகள் தயார் நிலையில் இருக்கவில்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக அறுவடை செய்த நெல்லுடன் மீண்டும் வீடு திரும்பிச்செல்லவேண்டிய நிலை ஏற்பட்டதாக விவசாயிகள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, ஒரு கிலோ நெல் உற்பத்திக்கு குறைந்த பட்சம் 114 ரூபாய் முதல் 120 ரூபாய் வரை செலவாகும் என்பதால் ஒரு கிலோகிராம் நெல்லுக்கான குறைந்தபட்ச விலை 140 ரூபாயாக அதிகரிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# நாணய நிதிய பிரதிநிதிகள் ஜனாதிபதியை சந்தித்தனர்



கொழும்பு, பெப். 08

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ள நீட்டிக்கப்பட்ட கடன் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத் தூதுக் குழுவினருக்கும் இடையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் 3 பில்லியன் டொலர் நீட்டிக்கப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் மூன்றாவது மீளாய்வின் பின்னர் அதிகாரிகள் மட்ட உடன்பாட்டை அரசாங்கம் எட்டியுள்ளது.

இந்த மீளாய்வின் விடயங்கள் இந்த வருடம் பெப்ரவரி மாத இறுதியில் சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது. இதுதொடர்பான முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் அந்தத் திட்டத்தை தொடர்வது குறித்த அரசாங்கத்தின் தலையீடு குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் இலங்கைக்கான நீடிக்கப்பட்ட கடனுதவியின் நான்காவது தவணையாக 333 மில்லியன் டொலர் தொகை வழங்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன், சர்வதேச நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி.கே.ஜி. ஹரிஸ்சந்திர, பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட பலர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் 120, அரிசி 220 என்றால் 100 ரூபா யாருக்கு போகிறது?

## அரசாங்கத்திடம் விவசாய அதிகார சபை கேள்வி

மட்டக்களப்பு, பெப்.08

**ஒரு கிலோ நெல் 120 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படும் எனவும், அரிசியின் விற்பனை விலை 220 ரூபாய் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. அப்படியானால் மேலதிகமாக உள்ள 100 ரூபாய் யாருக்கு போகின்றது? என விவசாய அதிகார சபையின் செயலாளர் ஜெயானந்தன் நிறஞ்சனகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.**



எனவே, விவசாயிகளின் பிரச்சனைகளை கருத்தில் கொண்டு, சரியான நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுக்காமல் விட்டால் கடந்த காலத்தில் இந்த நாட்டில் எப்படி பிரச்சனைகள் ஏற்பட்டதோ, அதே போன்ற பிரச்சனைகள் எதிர்காலத்தில் ஏற்படலாம் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட தேசிய கமக்கார அதிகார சபையின் ஊடகச் சந்திப்பு நேற்று முன்தினம் மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் அதிகமான பிரதேசங்களில் நெல் அறுவடை இடம்பெற்று வருகின்ற நிலையில், விவசாய பிரதி அமைச்சர் தலைமையில் கொழும்பில் நெல் விலை தொடர்பில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இதன் போது, உலர்ந்த நெல்லை 120 ரூபாய்க்கு கொள்வனவு செய்வதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, அரிசியின் விலை 220 ரூபாய் என அறிவிக்கின்றனர்.

அப்படியானால் அந்த மேலதிகமான 100 ரூபாய் யாருக்கு போகின்றது.

உண் மையில் அரிசி ஆலை உரிமை யாளர்களின் செலவை சேர்த் தால் 158 ரூபாய்தான் செல வாகப் போகின்றது. இலாபத் தையும் சேர்த்து பார்த்தால் 175 ரூபாய் தான் செலவாகப் போகின்றது. ஆனால், கிட்டத் தட்ட 40 ரூபாய் யாருக்கு போகின்றது என தெரியாத நிலையே உள்ளது.

அத்துடன் விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிக்கு இதில் ஒரு ரூபாய் கூட இல்லை. அதேபோன்று அரிசி பாவனையாளர்களுக்கும் ஒரு ரூபாய் கூட கிடைக்கவில்லை. இந்த 40 ரூபாய் யாருக்கு போகின்றது. எனவே, இதற்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும்"- என்றார். (எ)

# பாடசாலைகளுக்கு சிவப்பு எச்சரிக்கை



சாய்ந்தமருது, பெப்.08

சாய்ந்தமருதில் உள்ள 3 பாடசாலைகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் டெங்கு களத்தடுப்பு நடவடிக்கை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் உள்ளிட்ட குழுவினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, பாடசாலைகளில் டெங்கு மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பான பரிசோதனைகளில் ஈடுபட்டதன் மூலம் மூன்று பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கீழ் உள்ள மூன்று பாடசாலைகளில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அங்கு உள்ள ஆண் மாணவர்களின் மலசலகூடம் மிகவும் அசுத்தமானதாகவும் மோசமானதாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

மேலும், டெங்கு நுளம்புகள், நுளம்புக் குடம்பிகளும் அதிகமாக இனம் காணப்பட்ட இடங்களாகவும் பாடசாலைகள் காணப்படுகின்றமையால் அப்பாடசாலைகளுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

மேலும், பாடசாலையின் சுகாதாரத்தை சீர் செய்வதற்கு மிகக் குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டதுடன் அந்த குறுகிய காலத்தினுள் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் அழிக்கப்படுவதுடன் மலசலகூடங்களும் சீரமைக்கப்பட வேண்டும் என இதன் போது அறிவுறுத்தப்பட்டது.

இவற்றை குறிப்பிட்ட காலத் தில் சிறப்பாக பேணாத பாட சாலைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் சூழலை பராமரிக்க களத்தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சுகாதார வைத்திய அதி காரி மதன் தெரிவித்தார். (எ)

# வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம்

சாய்ந்தமருது, பெப்.08

கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை தூய்மைப்படுத்தும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.



சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் தலைமையில் நடைபெற்ற இந்த சிரமதானப் பணியில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ. எல். ஜரீன் உட்பட அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அலுவலக வளாகம் முழுமையாக தூய்மைப்படுத்தப்பட்டதுடன் அலுவலக பின்புற பகுதியில் நிலையான சுகாதாரம் மற்றும் சுத்தம் உறுதி செய்யப்பட்டது. மேலும், அலுவலக சுவரிலிருந்து கழற்றப்பட்ட பழைய பெயர் பலகை மீண்டும் புதுப் பொலிவுடன் அலுவலக (வடக்குப்பகுதி) மதிலில் பொருத்தப் பட்டது. (எ)

# கற்றாழை கன்றுகள் வழங்கல்

சாய்ந்தமருது, பெப்.08

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட அன்னையர் ஆதரவு குழுவினருக்கான கற்றாழை கன்றுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் ஆலோசனைக்கு அமைவாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இயற்கை வேளாண்மை வழிமுறையை பரப்பும் நோக்குடன் இந்தச் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டது.

மேலும் இந்தக் கற்றாழைக் கன்றுகளை அன்னையர் ஆதரவு குழு உறுப்பினர்கள் தங்கள் வீடுகளில் நட்டு பாதுகாக்க வேண்டும் என்பதுடன் கற்றாழை வளர்ப்பு முறைகள், நீர் பாதுகாப்பு மற்றும் உரமளிப்பு தொடர்பான அறிவுரைகளும் வழங்கப்பட்டன.(எ)

# கஞ்சாவுடன் கைதான மூவர் விளக்கமறியலில் வைப்பு

அக்கரைப்பற்று, பெப்.08

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட மூவர் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி ஊழல் ஒழிப்புப் பிரிவுக்கு பொறுப்பான உப பொலிஸ் பரிசோதகர் கே. எல். எம். முஸ்தபா தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் மாலை குறித்த பிரதேசத்துக்கு சென்று சந்தேக நபரை கைது செய்ததுடன் அவரிடமிருந்து 110 மில்லி கிராம் கேரளக் கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர்.

இதேவேளை, அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்களில் இருந்து இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில், ஒருவரிடம் இருந்து 1050 மில்லி கிராம் கஞ்சாவும், மற்றைய நபரிடமிருந்து 500 மில்லி கிராம் கஞ்சாவையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இவர்களை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசார ணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கிழக்கு ஆளுநர் தலைமையில் அம்பாறையில் மக்கள் தினம்



கல்முனை, பெப்.08

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் பொதுமக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வு செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மக்கள் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்கிரம, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள் மற்றும் பிற நிறுவனங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் தங்கள் பிரச்சனைகளை பொறுப்பான அதிகாரிகளிடம் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்ட அதேவேளை ஆளுநர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஆகியோரிடமும் தங்கள் பிரச்னைகளை நேரில் முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை விடுதியில் தீ 17 மாணவர்கள் மரணம்!

அபுஜா, பெப்.08

**நைஜீரியாவில் பாடசாலை விடுதியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 17 மாணவர்கள் உயிரிழந்தனர்.**

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் சம்பாரா மாகாணம் கவுரா நமோடா நகரில் இஸ்லாமிய மதப்பாடசாலை உள்ளது. இந்த பாடசாலையில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் விடுதியில் தங்கி மதப்பாடம் கற்று வருகின்றனர்.

இந்த நிலையில், பாடசாலை விடுதியில் நேற்று முன்தினம் இரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்து ஏற்பட்ட சமயத்தில் விடுதியில் 100இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியிருந்தனர்.

இந்த தீ விபத்து குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் விரைந்து வந்து விடுதியில் சிக்கிய மாணவர்களை மீட்டனர். ஆனால், தீயில் சிக்கி 17 மாணவர்கள் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

அந்த மாணவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும், தீ விபத்து குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# ஊழல் வழக்கிலிருந்து பாக். பிரதமர் விடுவிப்பு


இஸ்லாமாபாத், பெப்.08

பாகிஸ்தானில் ஊழல் வழக்கில் இருந்து பிரதமர் மற்றும் அவரது மகன் ஆகியோர் விடுவிக்கப்பட்டனர்.

பிரதமர் ஷபாஸ் ஷெரீப்பின் மகன் ஹம்சா ஷெபாஸ் பஞ்சாப் மாகாண முதலமைச்சராக இருந்தபோது, கடந்த 2018இல் சர்க்கரை ஆலை ஒப்பந்தத்தை தனது சகோதரன் சுலேமானுக்கு வழங்கினார். இதன்மூலம், இலங்கை மதிப்பில் சுமார் 20 கோடி ரூபாய் வரை மோசடி இடம்பெற்றதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து பிரதமர் ஷபாஸ் ஷெரீப் மற்றும் ஹம்சா ஷெபாஸ் ஆகியோர் மீது வழக்கு தொடரப்பட்டது.

இருவரும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். எனினும், இந்த வழக்கின் விசாரணை லாகூர் நீதிமன்றில் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இந்த நிலையில் வழக்கை வாபஸ் பெறுவதாக முறைப்பாட்டாளர் அறிவித்துள்ளார். இதனையடுத்து ஊழல் வழக்கில் இருந்து பிரதமர் ஷபாஸ் ஷெரீப் மற்றும் அவரது மகன் ஹம்சா ஷெரீப் ஆகிய இருவரும் நேற்று விடுவிக்கப்பட்டனர். (எ)

# விமானம் தாங்கி போர்க்கப்பல் ஈரானில் பயன்பாட்டுக்கு வந்தது



தெஹ்ரான், பெப்.08

கடற்படை பலத்தை அதிகரிக்கும் நோக்கில் ஆளில்லா விமானம் தாங்கி போர்க் கப்பலை ஈரான் முதன் முதலில் நேற்று முன்தினம் முதல் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது. இந்த போர்க்கப்பலில் ஆளில்லா விமானங்கள், ஹெலிகொப்டர்கள், ஏவுகணைகளையும் பயன்படுத்த முடியும் என்று ஈரான் தெரிவித்துள்ளது. (எ)

# கொங்கோவில் மேலும் ஒரு நகரம் கிளர்ச்சியாளர்களின் வசமானது



கின்ஷாசா, பெப்.08

ஆபிரிக்க நாடான கொங்கோவில் மேலும் ஒரு நகரத்தை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

அங்கு எம் - 23 கிளர்ச்சியாளர்கள் நீண்ட காலமாக கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக ருவாண்டா சுமார் 4 ஆயிரம் படையினரை அனுப்பி உதவி புரிந்து வருகிறது. ஏற்கனவே, கோமா நகரத்தை கிளர்ச்சியாளர்கள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த உள்நாட்டுப் போரில் இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாக ஐ. நா. தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கடந்த 3ஆம் திகதி மனிதாபிமான அடிப்படையில் எம் - 23 கிளர்ச்சியாளர்கள் போர் நிறுத்தத்தை அறிவித்தனர். ஆனால், அதற்குள் கிழக்கு கொங்கோ ஜனநாயக குடியரசின் புகாவுக்கு அருகே மற்றொரு நகரத்தையும் கைப்பற்றியுள்ளதாக கிளர்ச்சியாளர்கள் நேற்று அறிவித்துள்ளனர். இதனால், உள்நாட்டுப் போர் மேலும் தீவிரமடைந்துள்ளது. (எ)

# பணயக் கைதிகள் பரஸ்பரம் விடுதலை



அபுதாபி, பெப். 08

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு இடையே அமீரகம் சார்பில் நடந்த 12ஆவது சமாதான பேச்சு முயற்சியால் நேற்று முன்தினம் இரு நாடுகளைச் சேர்ந்த 300 பணயக் கைதிகள் பரஸ்பரம் விடு தலை செய்யப்பட்டுள்ளனர். (எ)

# அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்




வாஷிங்டன், பெப்.08

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் குடியேற்ற ஒடுக்குமுறை முதல் காஸா பகுதியிலிருந்து பலஸ்தீனர்களை வெளியேற்றும் திட்டம் வரை அனைத்து நடவடிக்கைகளுக்கும் கண்டனம் தெரிவித்து அமெரிக்காவில் போராட்டம் வெடித்துள்ளது.

பிலடெல்பியா, கலிபோர்னியா, மின்னசோட்டா, மிச்சிகன், டெக்சாஸ், விஸ்கான்சின், இண்டியானா மற்றும் அதற்கு அப்பாலும் உள்ள மாநிலங்களிலும் நேற்று முன்தினம் ஏராளமானோர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# நிவாரணப் பொருட்களுடன் எகிப்து சென்ற அமீரக கப்பல்



டுபாய், பெப்.08

டுபாய் ஹம்ரியா துறைமுகத்தில் இருந்து பலஸ்தீன மக்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட 5 ஆயிரத்து 800 தொன் நிவாரணப் பொருட்கள் அடங்கிய பிரமாண்ட 6ஆவது சிறப்பு கப்பல் எகிப்து அல் அரீஷ் துறைமுகத்தை நேற்று முன்தினம் மாலை அடைந்துள்ளது. இந்த நிவாரணப் பொருட்களை காஸாவுக்கு எடுத்து சென்று விரைவாக பொதுமக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காஸா பகுதியில் வசித்து வரும் மக்கள் இஸ்ரேலின் கடுமையான தாக்குதலுக்குள்ளாகி உள்ளனர்.

இந்தத் தாக்கு தலில் 45 ஆயிரத்துக்கும் மேற் பட்டோர் கொல்லப்பட்ட நிலையில் போர் நிறுத்தம் கார ணமாக தற்போது அமைதி திரும்பியுள்ளது. இந்த நிலையிலேயே பலஸ்தீன மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ)

# கிரீஸில் நிலநடுக்கத்தால் அவசரநிலை பிரகடனம்

ஏதேன்ஸ், பெப்.08

கிரீஸ் நாட்டின் சாண்டோரினி தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால், அங்கு அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பாவின் தென்கிழக்கே பால்கன் தீபகற்பத்தில் அமைந்துள்ள நாடு கிரீஸ். இந்த நாட்டில் பல்வேறு தீவுக்கூட்டங்கள் உள்ளன.

அந்த வகையில் ஏஜி யன் கடல் பகுதியில் கிரீஸின் சாண்டோரினி தீவு உள்ளது.

இந்த தீவில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 5. 2 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன. இதனால் மக்கள் மிகுந்த அச்சமடைந்தனர்.

மேலும், சாண்டோரினி தீவில் இருந்து 11 ஆயிரம் பேர் வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். (எ)

# கடத்தல் கும்பல் தாக்குதலில் இராணுவத்தினர் 10 பேர் பலி


அபுஜா, பெப்.08

கடத்தல் கும்பல் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் 10 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவின் தக்சட் பகுதியில் கால்நடைகளை கடத்தும் கும்பலை தடுக்க இராணுவத்தினர் நேற்று முன்தினம் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த கடத்தல் கும்பலை சேர்ந்தவர்கள் இராணுவத்தினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் 10 பேர் உயிரிழந்தனர். இதேவேளை, இராணுவம் நடத்திய பதிலடி தாக்குதலில் கடத்தல் கும்பலை சேர்ந்த 5 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என தகவல் வெளியாகியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி இலகு வெற்றி




நாக்பூர், பெப்.08

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திய அணி எளிதில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்களில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை இந்தியா 4 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது. அடுத்ததாக ஒருநாள் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதன்படி, முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி நாக்பூரில் நடைபெற்றது. இந்திய அணி தரப்பில் ஹர்ஷித் ராணா மற்றும் ஜெய்ஸ்வால் ஆகியோர் அறிமுக வீரர்களாக களமிறங்கினர். மூட்டு வலி காரணமாக விராட் கோலி அணியில் இடம்பெறவில்லை.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 47. 4 ஓவர்களில் 248 ஓட்டங்கள் அடித்த நிலையில் சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக பட்லர் 52 ஓட்டங்களும், ஜேக்கப் பெத்தேல் 51 ஓட்டங்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் ஜடேஜா மற்றும் ஹர்ஷித் ராணா ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 249 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 6 விக்கெட்களை இழந்து 251 ஓட்டங்கள் அடித்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் இலகு வெற்றி பெற்றது. அதிகபட்சமாக சுப்மன் கில் 87 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் சாகிப் மஃமூத் மற்றும் ஆதில் ரஷித் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். (எ)

2ஆவது டெஸ்ட் போட்டி

## ஆஸி அணி ஆதிக்கம் இலங்கை போராட்டம்

காலி, பெப்.08


அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 257 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதேவேளை, 3 விக்கெட்கள் இழப்புக்கு அவுஸ்திரேலிய அணி 197 ஓட்டங்கள் சேர்த்துள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா இன்னிங்ஸ் மற்றும் 242 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி காலி மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது.

முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணியின் தொடக்க வீரர் நிஸ்ஸங்க 11 ஓட்டங்களிலும், தனது கடைசி சர்வதேச போட்டியில் களமிறங்கிய கருணாரத்ன 36 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். பின்னர் களமிறங்கிய வீரர்களில் சந்திமால் மற்றும் குசல் மெண்டிஸ் பொறுப்புடன் விளையாடி அரைச்சதம் அடித்தனர். முதல் நாள் முடிவில் இலங்கை 9 விக்கெட்களை இழந்து 229 ஓட்டங்கள் எடுத்தது. குசல் மெண்டிஸ் 59 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

நேற்று 2ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து சிறப்பாக விளையாடிய குசல் மெண்டிஸ் 85 ஓட்டங்கள் எடுத்தார். இந்த நிலையில் இலங்கை 257 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அவுஸ்திரேலியா சார்பில் ஸ்டார்க், லயன், குனமென் ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

தொடர்ந்து அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் விளையாடி வருகிறது. அந்த அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 197 ஓட்டங்கள் எடுத்துள்ளது. விக்கெட்கள் வீழ்த்த இலங்கை அணி பந்து வீச்சாளர்கள் போராடி வருகின்றனர். (எ)



## நாம் பலமாக திரும்புவோம்

### பட்லர் சொல்கிறார்

நாக்பூர், பெப்.08

உண்மையிலேயே முதல் போட்டியில் தோல்வியை சந்தித்தது ஏமாற்றத்தை அளிக்கிறது. அடுத்த போட்டியில் நாங்கள் பலமாக திரும்புவோம் என்று இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் தெரிவித்தார்.

இந்தியா - இங்கிலாந்து இடையிலான முதல் ஒருநாள் போட்டி நாக்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், இந்தியா 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


இந்த நிலையில் தோல்வி குறித்து பேசிய இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் கூறுகையில், "உண்மையிலேயே நாங்கள் இந்த போட்டியில் தோல்வியை சந்தித்தது ஏமாற்றத்தை அளிக்கிறது. ஏனெனில் இந்த போட்டியின்போது நாங்கள் மிகச்சிறப்பாக ஆட்டத்தை தொடங்கி இருந்தோம். ஆனால், பவர்பிளே ஓவர்களிலேயே அடுத்தடுத்து விக்கெட்களை இழந்ததால் எங்களால் பெரிய ஓட்ட குவிப்பை வழங்க முடியாமல் போனது.

இந்த போட்டியில் மேலும் 40 முதல் 50 ஓட்டங்கள் அடித்திருந்தால் வெற்றிக்கு சாதகமாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஸ்ரேயஸ் ஐயர் மற்றும் சுப்மன் கில் ஆகியோரது இணைப்பாட்டம்தான் வெற்றியை எங்களிடம் இருந்து பறித்தது. அடுத்த போட்டியில் நாங்கள் பலமாக திரும்புவோம்"- என்று கூறினார். (எ)

## 3 விக்கெட் வீழ்த்தி ராணா சாதனை

நாக்பூர், பெப்.08

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 3 விக்கெட்கள் வீழ்த்தியதால் ஹர்ஷித் ராணா புதிய சாதனை படைத்துள்ளார். ஹர்ஷித் ராணா தனது முதலாவது டெஸ்டில் (அவுஸ்திரேலியாவுக்கு எதிராக) 3 விக்கெட்கள் எடுத்தார். இங்கிலாந்துக்கு எதிரான அறிமுக ரி - 20 போட்டியில் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இப்போது, தனது முதலாவது ஒருநாள் போட்டியிலும் 3 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் மூன்று வடிவிலான போட்டியிலும் அறிமுக போட்டியிலேயே 3 விக்கெட்கள் வீழ்த்திய முதல் இந்திய பந்துவீச்சாளர் என்ற சாதனையை ஹர்ஷித் ராணா படைத்துள்ளார்.(எ)



## ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்

கேப்டவுன், பெப்.08

தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகள் இடையிலான முத்தரப்பு ஒருநாள் தொடர் இன்று 8ஆம் திகதி லாகூரில் தொடங்குகிறது.

இந்தத் தொடருக்கான தென்னாப்பிரிக்க அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. தெம்பா பவுமா தலைமையிலான இந்த அணியில் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் ஜெரால்ட் கோட்ஸி இடம்பெற்றிருந்தார். இவர் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சம்பியன்ஸ் கிண்ண தென்னாபிரிக்க அணியிலும் இடம்பெற்றிருந்தார்.

இந்த நிலையில், இந்த முத்தரப்பு தொடர் மற்றும் எதிர்வரும் சம்பியன்ஸ் கிண்ண தொடர்களில் இருந்து ஜெரால்ட் கோட்ஸி விலகியுள்ளார். இடுப்பு வலி காரணமாக அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது. அவருக்கான மாற்று வீரர் இன்னும் அறிவிக்கப்படவில்லை. (எ)

## ஆஸி. அணியிலிருந்து கம்மின்ஸ் விலகல்

சிட்னி, பெப்.08

சம்பியன்ஸ் கிண்ண தொடரில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய அணியிலிருந்து பட் கம்மின்ஸ் விலகியுள்ளார்.

8 அணிகள் பங்கேற்கும் ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி தொடங்கவுள்ளது. இதில் இந்திய அணிக்குரிய அனைத்து ஆட்டங்கள் மற்றும் முதலாவது அரையிறுதியும் டுபாயில் நடைபெறவுள்ளன.


மற்ற ஆட்டங்கள் அனைத்தும் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளன. இறுதிப் போட்டி நடைபெறும் இடம் இந்திய அணி தகுதி பெறுவதை பொறுத்து முடிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொடருக்கான அவுஸ்திரேலிய அணி கம்மின்ஸ் தலைமையில் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் கணுக்கால் காயம் காரணமாக கம்மின்ஸ் பங்கேற்பதில் சிக்கல் நிலவியது.

அதேபோன்று, மற்றொரு முன்னணி வீரரான ஜோஷ் ஹெசில்வுட்டும் விலா பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக களமிறங்குவது கடினம் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் சம்பியன்ஸ் கிண்ண தொடரிலிருந்து கம்மின்ஸ், ஹேசில்வுட் இருவரும் விலகியுள்ளனர்.

இதனை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இது அவுஸ்தி ரேலிய அணிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சதீவு...

எதிர்பார்க்கப்படுகிறது என்று யாழ். மாவட்ட பதில் மாவட்ட செயலர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவுக்கான ஏற்பாடு குறித்த கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள திருவிழா தொடர்பில் யாழ். மாவட்ட பதில் மாவட்ட செயலர் ம.பிரதீபன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

கச்சதீவு பிரதேசத்தை பொது மக்களின் வழிபாட்டுக்கு ஏற்ற வகையில் தயார்ப்படுத்தல் நடவடிக்கைகள் கடற்படையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பிரதேச சபையின் உத்தியோகத்தர்களும் இணைந்துள்ளார்கள்.

இந்த திருவிழாவில் கலந்துகொள்ளவுள்ள யாத்திரிகர்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. குடிதண்ணீர் விநியோகம் மற்றும் மலசலகூட வசதிகள் குறித்து ஆராயப்பட்டது.

இவ்வருடம் இலங்கையை சேர்ந்த 4000 யாத்திரிகர்களும் இந்தியாவை சேர்ந்த 4000 யாத்திரிகர்களும் என 8 ஆயிரம் யாத்திரிகர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், மேலதிகமாக உத்தியோகத்தர்கள், ஏனையோர் என ஆயிரம்பேர் உள்ளடங்கலாக 9 ஆயிரம் பேர் இதில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் கலந்து கொள்பவர்களுக்குரிய உணவு வசதிகள் குறித்து ஆராயப்பட்டது. அந்தவகையில் யாத்திரிகர்களுக்கு 14ஆம் திகதி இரவு உணவும், 15ஆம் திகதி காலை உணவும் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

போக்குவரத்துக்காக இ.போ.ச பஸ்களும் தனியார் போக்குவரத்துத் துறையினரின் பஸ்களும் பயன்படுத்தப்படவுள்ளன. 14ஆம் திகதி காலை 4 மணி முதல் முற்பகல் 11.30 வரை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து அந்த பஸ்கள் புறப்படும்.

அவர்களுக்குரிய போக்குவரத்துக் கட்டணமாக, நெடுந்தீவில் இருந்து கச்சதீவு செல்வதற்குரிய ஒருவழி கட்டணமாக ஆயிரம் ரூபாயும், குறிகட்டுவானில் இருந்து கச்சதீவு செல்பவர்களுக்குரிய ஒரு வழி கட்டணமாக ஆயிரத்து 300 ரூபாயும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இவ்வாறு படகுச் சேவையில் ஈடுபடுகின்ற படகின் உரிமையாளர்கள், பொதுமக்களின் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் அதற்குரிய சான்றிதழ்களை கடற்படையினரிடம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் எம்மால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ள யாத்திரிகர்கள் தங்களுடைய சுகாதார செயற்பாடுகளை பரிசீலிப்பதற்காக எங்களுடைய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

கடந்த வருடத்தில் ஏற்பட்ட குறைபாடுகள் அல்லது அதில் அடையாளம் காணப்பட்ட பிரச்னைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

சுங்கத் திணைக்களத்தின் பிரசன்னமும் கூட்டத்தில் இருந்தது. இந்தியாவில் இருந்து வருகின்ற யாத்திரிகர்களை, சரியான நடைமுறைகளுக்கு அமைவாக வரவேற்று அவர்களை ஆலய வழிபாட்டு செயற்பாடுகளில் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து அடுத்தகட்ட கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு, எடுக்கப்பட வேண்டிய இறுதித் தீர்மானங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது -என்றார். (அ)

## ஐ. எம். எவ்...

சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்கள பணிப்பாளர் ஜூலி கோசக் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடக சந்திப்பிலே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையுடனான நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழான மூன்றாவது மதிப்பாய்வு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்று அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடும் எட்டப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் நிறைவேற்று சபை ஆராய்ந்து அனுமதியளித்த தன் பின்னர் இலங்கைக்கு மேலும் 333 மில்லியன் டொலர் கடனுதவி வழங்கப்படும் எனச் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்கள பணிப்பாளர் ஜூலி கோசக் தெரிவித்துள்ளார். (அ)

## மலையக தமிழர்...

சான்றிதழ் இன்றியும் இருக்கின்றனர். கிளீன் சிறீ லங்கா திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சில லயன் பகுதிகளை மறுசீரமைக்கும் பணிகள் ஆரம்பமாகி உள்ளது டன், அதனுடன் இணைந்து அவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டையை பெற்றுக்கொடுக்கும் பணியும் ஆரம்பமாகி உள்ளது.

பாதை வசதிகள் இன்றி பல பெருந்தோட்ட மக்கள் இக்கட்டான நிலையில் உள்ளனர். பெருந்தோட்டக் கம்பனிகளின் இடம் என்பதால் அங்கு பாதை வசதிகளை செய்ய முடியாதென கடந்த அரசாங்கங்கள் கூறின. இவர்கள்தான் அந்த உடன்படிக்கையை செய்தனர். என்றாலும், பாதைகள் செய்யப்படுவதன் ஊடாக பெருந்தோட்ட நிறுவனங்கள் தான் அதிக நன்மையடையும் என நினைக்கின்றோம். கட்டம் கட்டமாக அவர்களுக்கான பாதை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்போம்.

இந்திய தூதகரத்துடன் வீடுகளை அமைப்பதற்கான இணக்கப்பாடுகளை எட்டியுள்ளோம். இந்த வருடத்தில் 5,500 வீடுகள் முதல் கட்டமாக அமைக்கப்படும்.

அந்த மக்களுக்கு இன்னமும் முகவரி இல்லை. தபால் திணைக்களத்துடன் இணைந்து விரைவில் அவர்களுக்கு முகவரியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வீடுகள் அரசியல் நோக்கங்களின் அடிப்படையிலேயே கடந்த காலத்தில் வழங்கப்பட்டிருந்தன. பலர் தமது வீடுகளை விற்றுள்ளனர். எதிர்காலத்தில் கட்டப்படும் வீடுகள் முதல்கட்டமாக அதிகமாக மண்சரிவை சந்தித்துள்ள மற்றும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கே வழங்கப்படும்-என்றார். (அ)

## அரிசி...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டைப் பொறுத்தவரையில் கிழக்குப் பகுதி நெற்களஞ்சியம் என்று வரலாறு கூறுகின்றது. ஆனால், அரிசி தட்டுப்பாட்டால் அந்நிய நாடுகளிடம் கையேந்தும் நிலை உருவாகியுள்ளது. நெல் விளையும் எமது தேசத்தில் அரசியை இறக்குமதி செய்வது வெட்கப்படவேண்டிய விடயம்.

தனிப்பட்ட முறையில் அரிசியை பதுக்கி வைப்பதால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். எமது பிரதான உணவான அரிசியை நாங்கள் சேகரிக்காமல் கண்டபடி அதனை விநியோகம் செய்கின்றோம். இதனால் ஏழைகள் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஆகவே அரசாங்கம் உத்தரவாத விலையில் அரிசியை விற்பனை செய்வது தொடர்பாகவும் அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரிசி கையிருப்பை பேண நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் அரிசி வாங்க முடியாமல் ஏழை மக்கள் திண்டாடுவதை பார்த்துக் கொண்டிருக்கமுடியாது-என்றார். (அ)

## 13 இந்திய...

அவர்கள், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று வழக்கு மீளவும் மன்னார் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

17 இந்திய மீனவர்களில் இரு மீனவர் களிடம் கைவிரல் அடையாளங்கள் பெறப்படாத நிலையில் அவர்கள் இருவரும், எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு மீனவர்களுக்கு இரண்டாவது தடவையாகவும், எல்லை தாண்டி சட்டவிரோத இழுவைமடி வலையைப் பயன்படுத்தி மீன்பிடித்த குற்றத்துக்காக இரண்டு வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதனால், ஏனைய 13 இந்திய மீனவர்களும், தலா 50 ஆயிரம் ரூபாய் தண்டப் பணத்துடன் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 10 வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டு, மன்னார் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர். (அ)

## எம். பிக்களின்...

'ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி ஒரு கருத்தைக் கொண்டிருந்தது. அதை சமூகத்துக்கு இழைக்கும் துரோகமாக மாற்றிவிட்டது. இதன் காரணமாக, எம். பிக்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை பாதிக்கப்பட்டுள்ளது. அதை மீட்டெடுக்கவே இந்த முன்மொழிவை கொண்டு வந்துள்ளேன்.

மக்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் பிரதிநிதித்து வப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தில் பணியாற்றி வருவதால், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே அவசியமாகியுள்ளது" என பிரேரணையை சமர்ப்பித்த ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (அ)

## யாழ்...

மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துக் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆலயங்கள் மற்றும் வேறு நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகளால் அசௌகரியங்கள் ஏற்படுவதாக எமக்குத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.

அதனால் ஆலயங்களில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தும்போது, மாணவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் பயன்படுத்தவேண்டும்.

குறிப்பாக இரவு வேளைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த ஒலிபெருக்கி மூலம் இடையூறு ஏற்படுவதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். ஆகவே, இதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இது குறித்து எழுத்து மூலம் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளோம்.

இவ்வாறு அசௌகரியங்கள் ஏற்படும் பட்சத்தில், அது தொடர்பில் முறைப்பாடுகளைப் பிரதேச செயலகங்களுக்கு அறிவித்தால், பிரதேச செயலர்கள் உடனடியாகப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்து அந்த ஒலியின் அளவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்-என்றார். (அ)

## மன்னார்...

திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கு இலங்கை நிறுவனமொன்று முன்வந்துள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார். (அ)

## குறைந்த...

நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

விவசாயிகளைக் கருத்திற்கொண்டு நிர்ணய விலையை அரசாங்கம் அறிவித்ததாக கூறிய அமைச்சர், அந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்து குறைந்த விலைக்கு அரிசி விநியோகிக் கப்படும் என்றும் உறுதியளித்தார். (அ)

## பட்ஜெட்டில்...

திணைக்களங்களுக்கு ஒதுக்கப்படவுள்ள நிதி விவரங்கள் மற்றும் அந்த நிதியில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் கே. சிவசந்திரன் தெளிவுபடுத்தினார்.

முன்வைக்கப்பட்ட திட்டங்களை ஒக்ரோபர் மாதத்துக்குள் நிறைவேற்றி முடிக்கவேண்டியது அந்தந்த திணைக்களத் தலைவர்களின் பொறுப்பு என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

சில திட்டங்கள் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி முன்மொழியப்பட்டிருந்த நிலையில், அதை மீளாய்வு செய்து, வன்னிப் பிராந்தியத்துக்கு மாற்றுமாறும் ஆளுநர் யோசனை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் சில வீதிகளை தரம் உயர்த்தும் செயற்திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், அதனை விடுத்து வன்னியில் விவசாயிகள் அதிகம் பயன்படுத்தும் வீதிகளை புனரமைக்க நிதி ஒதுக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், ஆளுநரின் செயலாளர் மு. நந்தகோபாலன், பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.குகதாஸ் ஆகியோர் பங்கேற்றனர். (அ)

## நாட்டை விட்டு...

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

2025 வரவு-செலவுத் திட்டம் மூலம் வைத்தியர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் 7,000 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் வைத்தியர்கள் தங்கியிருப்பதை நீட்டிப்பதன் மூலம் இலவச சுகாதார சேவைகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்துக்கான முன்மொழிவை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சமர்ப்பித்துள்ளது. அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் இந்த முன்மொழிவுகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும்.

அனைத்து வகை வைத்தியர்களுக்கும் தகுதிகள், செயல்திறன் மற்றும் சந்தை மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு தனித்துவமான சம்பள அமைப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# லசந்தவின் படுகொலைக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்படும்



## பிரதமர் ஹரிணி சபையில் உறுதி

கொழும்பு, பெப். 08

**ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைச் சம்பவத்துக்கு உரிய நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என பிரதமர் ஹரிணி அமரசூரிய சபையில் நேற்று தெரிவித்தார்.**

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள், பிரதமர் கலாநிதி ஹரிணி அமர சூரியவுக்கு அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவித்தார்.

சட்ட மா அதிபருக்கு எதிராக பாராளுமன்றம் அரசி யல் குற்றவியல் பிரேரணையை நிறைவேற்ற வேண்டும் என தெரிவித்து பிரதமருக்கு லசந்த விக்கிரமதுங்கவின் மகள் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை சம்பவத்தில் தற் போது அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளை தெளிவுபடுத்துமாறும் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தை தொடர்ந்து எவ்வாறான நடவடிக்கைகளை பிரதமர் முன்னெடுத்துள்ளார் எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வினவியிருந்தார்.

இதேநேரம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுப்பிய கேள்விக்கு பிரதமர் பதிலளித்தார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை சம்பவத்துக்கு உரிய நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என பிரதமர் கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பில் பல சாட்சியங்கள் உள்ளதாகவும் தாமும் அதற்குரிய பல்வேறுபட்ட செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அரசாங்கம் இந்த விடயத்தில் தெளிவாக உள்ளதாகவும் நீதியைப் பெற்றுக்கொடுக்க தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

லசந்த விக்கிரமதுங்கவின் மகள் முன்வைத்த கோரிக் கையை தாம் விளங்கிக்கொள்வதாகவும் கட்டாயம் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சட்ட மா அதிபர் திணைக்களம் சுதந்திரமாக செயற்பட வேண்டும் எனவும் இந்த கொலைச் சம்பவத்துக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். நீதியைப் பெற்றுகொடுக்கவேண்டி யது அரசாங்கத்தின் கடமை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதாகவும் மீண்டும் இது தொடர்பிலான விடங்களை ஆராய்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மேலும் புதிய அணுகுமுறைகளை செயற்படுத்து வதாகவும் புதிய சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் சுட்டிக்காட்டிய பிரதமர், 20 சாட்சியங்கள் ஏற்கனவே உள்ளதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக களம் உட்பட பல்வேறு தரப்பினர் இதற்காக உழைத்து வருவதாகவும் தெரிவித்தார். (அ)

## “ரணிலின் முடிச்சில் சிக்கிக் கொள்ளாதீர்”

### கண்டனப் போராட்டம் இன்று

கொழும்பு, பெப். 08

'ரணிலின் முடிச்சில் சிக்கிக் கொள்ளாதீர்கள்' என்ற தொனிப்பொருளில் சஜித் பாதுகாப்பு இயக்கம் ஏற்பாடு செய்துள்ள கண்டனப் போராட்டம் இன்று இடம்பெறவுள்ளது.,

அதன்படி, ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தலைமை யகத்தில் இன்று காலை 10 மணிக்கு இந்த கண்டனப் பேரணி இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி அமைப்பதற்கு எதிராக இந்தக் கண்டன போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

குறித்த கண்டனப் போராட்டம் தொடர்பில் மேலதிக தகவல்களை அறிந்துக்கொள்ள 071 663 1043 என்ற இலக்கத்தை தொடர்பு கொள்ளுமாறு சஜித் பாதுகாப்பு இயக்கம் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

## இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்!

### பாராளுமன்ற வளாகத்தில் தமிழக எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்



புதுடில்லி, பெப். 08

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட் டுள்ள இந்திய மீனவர்களை மீண்டும் தாயகம் அழைத்து வரக் கோரி தமிழக எம்.பி.க்கள் பாராளு மன்ற வளாகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப் பாடடத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர் கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், இலங்கை வசம் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி தூத ரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியும் தமிழக எம்.பி.க்கள் பாராளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. எம்.பி கனிமொழி-

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை கைது செய்து துன்புறுத்தி வருகின்றனர். தற்போது கிட்டத்தட்ட 97 தமிழக மீனவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். முதல்வர் மு.க. ஸ்டாலின் அமைச்ச ருக்கும் பிரதமருக்கும் கடிதம் எழுதியுள்ளார். அவர் இங்கு வரும் ஒவ்வொரு முறையும், இந்தப் பிரச் னைக்கு தீர்வு காண பிரதமரிடம் வலியுறுத்துகிறார்.

இலங்கை கடற்படையினர் நமது மீனவர்களின் கிட்டத்தட்ட 210 படகுகளை எடுத்துச் சென்றுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக் கப்படுகிறது. மீனவர்கள் தங்கள் படகுகள் இல்லா மல் என்ன செய்ய முடியும்? இது தமிழ்நாட்டில், குறிப்பாக மீனவர்களுக்கு ஒரு பெரிய பிரச்னையாக மாறி வருகிறது. அவர்களின் முழு வாழ்வாதாரம், குடும்பம் மற்றும் அனைத்தும் பாதிக்கப்பட்டுள் ளன. மீனவர் குழுக்களிடையே பேச்சு நடத்தி இந்தப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க குழுக்களை அமைப்பதாக உறுதியளித்த மத்திய அரசு, இதுவரை இது குறித்து எதுவும் செய்யவில்லை. கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை-என்று தெரிவித்தார்.

## தனியார் மருத்துவ கல்லூரிகளின் பயிற்சிக்காக அரச மருத்துவமனைகளை வழங்கும் முடிவு இரத்து

கொழும்பு, பெப். 08

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் பயிற்சிக் காக பல அரசு மருத்துவமனைகளை வழங்கும் முடிவை ரத்து செய்யத் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, கடந்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட அமைச்சரவை முடிவு ரத்து செய்யப்பட்டதாக பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜயமுனி தெரிவித்தார்.

முந்தைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில், சிலாபம் ஆதார வைத்தியசாலை மற்றும் சீதுவ விஜய குமாரதுங்க நினைவு வைத்தியசாலை உட்பட பல மருத்துவமனை களில் தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு மருத்துவப் பயிற்சி வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவது குறித்து அரசாங்கம் தற்போது எந்த முடிவையும் எடுக்க வில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட் டிருந்த மருத்துவ பீட மாணவர்கள் குழுவின் பிரதிநிதிகள் மற்றம் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இடையே நேற்று முன்தினம் இரவு கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

வடமேல், சப்ரகமுவ மற்றும் மொறட்டுவ பல்கலைக் கழகங்களின் மருத்துவ பீடங்களில் உள்ள பேராசிரியர் பிரச்னைகளைத் தீர்த்தல், அரச பல்கலைக்கழக கல்வியைப் பாதுகாத்தல் மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி , கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன் தினம் பிற்பகல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

## அரச வைத்தியசாலைகளில் மருந்துவகை பற்றாக்குறை

கொழும்பு, பெப். 08

கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்ட நாடளா விய ரீதியில் தேசிய, மாவட்ட மற்றும் பிராந்திய அரச வைத்தியசாலைகளில் மருந்து மற்றும் மருத்துவ உபகர ணங்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தயசாலைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு தேவையான பல அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நோயாளிகளின் சொந்த செலவில் வழங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இந்த சூழ்நிலை பல நோயாளிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் வைத்தியசாலை ஊழியர்கள் கூறுகின்றனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பல விடுதிகளில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறும் நோயாளிகள், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை தாங்களாகவே கொண்டு வர பரிந்துரைக்கப்படுவதாகவும், அவற்றை வாங்குவதற்கு பணம் இல்லாததால் பல நோயாளிகளும் அவர்களது உறவினர்களும் சிரமத்தை அனுபவித்து வருவதாகவும் குறிப்பிட்டனர்.

அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான சில வகையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நோயாளிகள் தனிப்பட்ட முறையில் வாங்கவேண்டியுள்ளதாகவும், இந்த மருந்துகள் மற்றும் உபகரணங்களில் சிலவற்றுக்கு 25,000 -30,000 ரூபாய் அல்லது அதற்கும் அதிகமாகச் செலுத்தவேண்டியுள்ளதாகவும் வைத்தியசாலை ஊழியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த சூழ்நிலையில் அரசாங்கம் தலையிடாவிட்டால், பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

மேலும், பல பிராந்திய வைத்தியசாலைகளுக்கு வருகை தரும் நோயாளிகளுக்கு வழங்க போதுமான மருந்துகள் இல்லை என்றும், நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் கடுமையான பற்றாக்குறையாக இருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org